ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
சாதாரணக் கூட்டம்

2022 ம் ஆண்டு ஜீன் மாதம் 30 ம் நாள் வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை :- திரு. த. ரவிக்கண்ணன், B.B.A,
நகர்மன்றத் தலைவர்

பொருள் எண் : 1

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் 2020-21-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் 2660/2021/சி1

**தீர்மானம் 91 – அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் : 2

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் பெயர் மாற்ற விண்ணப்பம் ,சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண பெயர் மாற்ற கட்டணம் ,குடிநீர் இணைப்பு பெற பதிவு கட்டணம் ,கட்டிட அனுமதி அனுபந்த படிவம் ,அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனத்திற்கான படிவம் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் கோரும் படிவம் , சுகாதாரச்சான்று சான்று மற்றும் நான்குமால் அளவீடு செய்வதற்கான கட்டணங்களை மறு நிர்ணயம் செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண் 40 நாள் 25-05-2022ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.அதன்படி மேற்கண்ட கட்டணங்களை மறு நிர்ணயம் செய்யும் பொருட்டு மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கும் அதற்கான கட்டணம் வழங்கவும் மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2939/2022/அ2

**தீர்மானம் 92 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 3

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள் ) திருகோவில் ஆடிப்பூரத் தேரோட்ட திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் வசதிக்காக நடமாடும் கழிப்பறை வாகனம் ஒவ்வொரு ஆண்டும் வாடகைக்கு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது .அதேபோல் இந்நகராட்சியில் இந்த வருடம் 01/08/2022ம் தேதி நடைபெற உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ஆடிப்பூரத் தேரோட்டத்திற்கு நடமாடும் கழிப்பறை வாகனம் மதுரை மாநாகராட்சியிலிருந்து இரண்டு நாட்கள் வாடகை மூலம் பெறுவதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.20,000/-க்கு மன்றம் முன் அனுமதிக்கு வேண்டப்படுகிறுது. (ந.க.எண் **3650**/2022/எச்1)

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2. இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**தீர்மானம் 93 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 4</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் ஜெராக்ஸ் மிஷின் இல்லை. மேலும் ஆய்வு கூட்டத்திற்கு தேவையான பொருட்கள் பிரிவு எழுத்தர்களால் அலுவலகத்திற்கு தேவையான கோப்புகளின் ஜெராக்ஸ் நகல்கள் அனைத்தும் அச்சகம் மூலம் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதால் 01-06-2022 முதல் அலுவலக முன்பணம் ரூ2,000/-லிருந்து ரூ3,000/-உயர்வு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5660/2019

**தீர்மானம் 94 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :5</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண் TN67 V1954 வாகனத்திற்கு தகுதி சான்று காலம் 02.08.2022–ல் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 2022-23 ம் ஆண்டுக்கான வாகன தகுதி சான்று பெறுவதற்கும் வாகனத்தை பழுது நீக்க பணிகள் மேற்கொள்வதற்குண்டான உத்தேச செலவினத்தொகை ரூ.48000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 3851/2022/இ2

**தீர்மானம் 95 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 6</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகதாராப்பிரிவு 33 வார்களுக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தேவையானதளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ரூ7,60,000/- மதிப்பீட்டில் வாங்குவதற்கு நகர் மன்ற அனுமதி எண் –51 நாள் 11/04/2022 –ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.மேற்கண்ட தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பாக 08/04/2022–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்துள்ள லட்சுமி எண்டர்பிரைசஸ் விழுப்புரம் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகாரம் செய்ய 08/04/2022–ல் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.மேற்கண்ட நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி உத்தரவை எதிர்நோக்கி 11/04/2022–ம் தேதிய ஸ்ரீலட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு தளவாடச்சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் 15 நாட்களுக்குள் விநியோகம் செய்யுமாறு நிபந்தனைகளுடன் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி விழுப்புரம் ஸ்ரீலட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனம் ,இந்நாளது தேதி வரை தளவாடச்சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் இந்நகராட்சிக்கு விநியோகம் செய்யவில்லை.இதனால் பொதுசுகாதாரப்பணிகள் தொய்வடைந்துள்ளதாலும் ,தென்மேற்கு பருவமழை, கூட்டுத்துப்புரவு பணிகள் மற்றும் ஸ்ரீஆண்டாள் கோவில் ஆடிப்பூரத்தேரோட்டம் நடைபெற உள்ளதாலும் ,இந்நகராட்சி நிர்வாக நலன் கருதி பொத சுகாதாரப்பிரிவிற்கு மேற்கண்ட தளவாடச்சாமாகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்ய நகர்மன்றத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட நகர் மன்றத் தீர்மான எண் -70, நாள் 25/05/2022-யை ரத்து செய்யவும் மேற்கண்ட தளவாடசாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை விநியோகம் செய்யாத ஸ்ரீலட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் வேலை உத்தரவினை ரத்து செய்யவும், இந்நகட்சி மூலம் மீன்டும் ஒப்பந்தப்புள்ளி பெற்று மேற்கண்ட பணிகள் தொடர்பாக குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளிக்கும் நிறுவனத்திற்கு உத்தரவு வழங்குவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1767/2022/எச்1

**தீர்மானம் 96 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 7</u>

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவ.களின் ந.க.எண்230/2022/செ.ம.தொ.அ நாள் 29.04.2022ம் தேதிய கடிதத்தில் தமிழக அரசின் முதலாம் ஆண்டு சாதனை மலர் வெளியிட உள்ளதாகவும், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அரசுத்துறைகளில் நடைபெறும் வளர்ச்சி பணிகள் குறித்து விளம்பரம் வெளியிட நிதி நடைபெறும் வளர்ச்சி பணிகள் குறித்து விளம்பரம் வெளியிட நிதி ஒதுக்கீடு மற்றும் விதிகளுக்கு உட்பட்டு விளம்பரம் வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளதன்படி ,தினத்தந்தி நாளிதழில் தமிழக அரசின் முதலாமாண்டு சாதனை மலரில் மிகச்சிரிய அளவில் 03.06.2022–ம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ18,900/-ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :- 1) மேற்கண்ட செலவினத்தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) நகர்மன்றத் தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் 2981/2022/E1

**தீர்மானம் 97 –முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 8</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் -03, கதவு எண் 62/2 அய்யம்பட்டி வடக்குத்தெருவில் உள்ள குடிநீர் இணைப்பானது வணிக பயன்பாடாக உபயோகபடுத்தப்பட்டு தற்போது வீட்டுககுடியிருப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு சொத்து வரி இரசீதில் வணிக பயன்பாடு உன்பதை சீட்டு பயன்பாடு என மாற்றம் செய்து தற்போது குடிநீர் கட்டணத்தையும் வீட்டு பயன்பாட்டிற்கு குறைத்து தரும்படி கோரியுள்ளளர் .மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டதில் வீட்டு பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கணிணியில் 01.01.2022 முதல் வணிக பயன்பாடு என்பதை வீட்டு உபயோகமாக மாற்றம் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1686/2021/இ3

**தீர்மானம் 98 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :9</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு வசூல் செய்யப்படும் வாடகையுடன் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரியினை ( ஜனவரி 2022 முதல் ஜூன் 2020 வரையிலான காலத்திற்கு ) (GST) ஒவ்வொரு மாதமும் உரிய தலைப்பில் செலுத்திய விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்கண்ட சரக்கு மற்றும் சேவை வரி (GST), உரிய தலைப்பில் செலுத்திய விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை மேற்கொண்டு வரும் திரு.சரவணன், சிவகாசி என்பவருக்கு அதற்கான பட்டியல் தொகை ரூ.9000/- வழங்க மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு: - அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:6970/2011/அ3

**தீர்மானம் 99 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 10</u>

இந்நகராட்சி வார்டு எண் -25 கதவு எண் -23 திருவேங்கட அன்னைகள் தெரு என்ற முகவரியில் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்ய விண்ணப்பித்துள்ளார். குழாய் பொருத்துனர் அவர்களின் குறிப்பின்படி நகராட்சி குடிநீர் குழாய் இணைப்பு 15 வருடமாக மேலாக உள்ளது குடிநீர் குழாயை பயன்படுத்துவது இல்லை மேற்படி கணிணியில் இணைப்பு எண் 130/12337 யை 01.04.2022 முதல் நிரந்தரமாக துண்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:2211/2022/இ3

**தீர்மானம் 100 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 11</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 21 சிவஞானபுரம் தெரு கதவு எண் 126ல் சொத்துவரி சீராய்வின் போது தரை தளம் மற்றும் முதல் தளம் தொழிற்சாலை கட்டிடமாக இருந்தது. அதனை 2017-18ல் மறு சீராய்வின் போது மனுதாரர் திரு.ஆ.ரவிச்சந்திரன் என்பவரின் கட்டிடத்தின் முதல் தளத்திற்கு புதிதாக 126/1 என புதிய கதவிலக்கம் வழங்கப்பட்டு சொத்துவரிவிதிப்பு எண்130/021/00790 மற்றும் 130/021/00795 என இரண்டு வரிவிதிப்புக்கள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒரே கட்டிடத்திற்கு சொத்துவரி சீராய்வின் போது இருமுறை வரிவிதிப்பு செய்யபட்டுள்ளது. எனவே கூடுதல் வரிவிதிப்பு செய்துள்ள 130/021/00795 ஐ சொத்துவரி கணினி கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1390 /2021/அ2

**தீர்மானம் 101 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :12</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட திருமுக்குளம் அருகில் உள்ள பயணியர் விடுதியினை மாத வாடகை முறையில் அனுபவித்துக்கொள்ளும் குத்தகை இனத்திற்கான பொது ஏல / ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு KAL PUBLICATIONS (P) LTD என்ற நிறுவனத்திற்கு படடியல் தொகை ரூ.15960/- வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட செலவினத் தொகையினை வழங்க மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு: - மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்:2089/2022/அ2

**தீர்மானம் 102 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 13</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 26, மேட்டுத்தெரு மேல்வரிசை, டவுன் சர்வே எண் 720/1A & 720/1B –ல் கீழ் தளத்திற்கு கதவு எண் 114/1 எனவும் முதல் தளத்திற்கு கதவு எண் 114/2 எனவும் குறிப்பிட்டு இரண்டு கொத்துவரி விதிப்புகள் உள்ளதாகவும் , ஆனால் மேற்கண்ட இடத்தில் கதவு எண் 114/2 கொண்டுள்ள ஒரே ஒரு குடியிருப்பு மட்டுமே இருங்நது வருவதாகவும் ,கதவு எண் 114/1 என்ற எண்ணிற்குரிய சொத்து வரியினை நீக்கம் செய்து தரும்படி திரு..ஆர்.மாரிமுத்து என்பவர் தனது 27-04-2022ம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார்.விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டித்தினை வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் நேரில் ஆய்வு செய்தும் புகைப்படம் எடுத்தும் வருவாய் ஆய்வாளரின் 10-06-2022ம் தேதிய குறிப்பில் மேற்கண்ட இடத்தில் கதவு எண் 114/2 கொண்டுள்ள ஒரே ஒரு குடியிருப்பு (ஓட்டு வீடு ) மட்டுமே இருந்து வருவதாகவும் ,கதவு எண் 114/1 என்ற எண்ணிற்குரிய கொத்துவரியினை நீக்கம் செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நகர் வார்டு எண் 26,மேட்டுத்தெரு மேல் வரிசை கதவு எண் 114/1 சொத்துவரி விதிப்பு எண் 130/026/00455 –யை கணிணியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண் 2939/2022/அ2

**தீர்மானம் 103 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :14</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட திரௌபதியம்மன் கோவில் தெருவில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். மேற்கண்ட தெருவினில் பொது போக்குவரத்திற்கு சாலை வசதி ஏதும் இல்லை, தெரு மக்கள் சாலை வசதி கோரி நீண்ட நாள் கோரிக்கை வைத்துள்ளதாலும், மழை காலங்களில் மிகவும் சிரமப்படுகிறார்கள், மேற்படி மண் சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்து தர வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. எனவே திரௌபதியம்மன் கோவில் தெருவினில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5,00,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க. எண் 3969/2022/E1

**தீர்மானம் 104 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்15</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 11 செட்டியக்குடி கடலைக்காரத்தெரு மற்றும் வார்டு எண் 22 ஊரணிபட்டித்தெரு என இரண்டு இடங்களில் உள்ள வால்வில் ராடு, மற்றும் செக் நட்டு , ராடில் மறை தேய்மானம் ஆகி பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி பழுதினை சரி செய்யவும் ஒப்பந்தபுள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத்தொகை ரூ 50,000/- யை நகராட்சி சட்டம் 15-ன் கீழ் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 3591/2022/இ2

**தீர்மானம் 105 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :16</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17, Q-760 கோவிந்தன் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட் வரி விதிப்பு எண்:130/017/00005க்கு 2009-10 முதல் 2022-23 வரை ரூ.29937/- திரு.ஆனந்தகுமார் கைத்தறி அலுவலர் பெயரில் நிலுவையில் உள்ளது. மேற்கண்ட தொகையினை செலுத்த கோரப்பட்டதில், திரு.ஆனந்தகுமார் 10.03.2009 இடமாறுதலில் சென்ற பின்பு தற்போது வரை கைத்தறி அலுவலர் இல்லை. எனவே, மேற்படி தொழில்வரி வரி விதிப்பு எண்:130/017/00005 க்கான தொழில்வரி ரூ.29937/-ஐ நீக்கம் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: - மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்:3565/2022/பி2

**தீர்மானம் 106 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 17</u>

நகராட்சி அலுவலக வடபுறம் உள்ள கட்டிடத்தில் 15 கடைகள் கட்டும் பணியில் மேற்குப் பக்கம் மாற்றியமைத்து கூடுதலாக 3 கடைகள் கட்டினால் கூடுதல் வாடகை வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே கூடுதலாக 3 கடைகள் அமைக்கவும் 13 கடைகளுக்கும் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ள 3 கடைகளுக்கும் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ள 10 கடைகள் சேர்த்து 13 கடைகளுக்கு தனித்தனியாக சர்வீஸ் வயர் இழுத்து புதிய மின் இணைப்பு பெறப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்குப் பக்கம் 3 கடைகள் கூடுதலாக மாற்றியமைக்கவும் 1 எண்ணம் புதிய கடை கட்டவும் 13 கடைகளுக்கு வயரிங் வேலை செய்து சர்வீஸ் வயர் இழுத்து புதிய மின் இணைப்பு பெறவும் அதற்காக ரூ.15,00,000/- க்கு ( ரூபாய் பதினைந்து இலட்சம் ) தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் 107 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 18</u>

நகராட்சி அலுவலக வடபுறம் உள்ள கட்டிடத்தினை புணரமைப்பு செய்து 15 கடைகளாக மாற்றியமைக்க 15.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் பெற்று பணிகள் நடைபெற்றுள்ளது. கட்டி பணி நடைபெறும் போது கட்டிடத்தின் மாடி தள வரிசை கற்கள் சேதமடைந்திருந்தது. மேலும் கிழக்குப்புறம் உள்ள 5 கடைகளுக்கு புதியதாக சர்வீஸ் வயர் இழுத்து மின் இணைப்பு பெறப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட கூடுதல் பணிகளை மேற்கொண்டால் மட்டுமே கடைகள் முடிவடைந்து வாடகை வருவாய் பெறப்பட இயலும். எனவே மேற்கண்ட விவரப்படி மாடி தள வரிசை கற்கள் சீர் செய்யவும் 5 கடைகளுக்கு புதியதாக சர்வீஸ் வயர் இழுத்து மின் இணைப்பு பெறும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவு ரூ.3,92,000/- செலவு செய்யவும் திருத்திய மதிப்பீடு ரூ.18,92,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு. மேலும் கூடுதல் பணிகளை ஏற்கனவே பணி ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் திரு. கு. மணிகண்டன் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் 108 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்19</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வந்த திருமதி.D. மல்லிகா, நகராட்சி ஆணையாளர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் இருந்து செங்கல்பட்டு நகராட்சிக்கு பணியிட மாறுதல் உத்திரவு வரப்பெற்றதால் ஆணையாளர் குடியிருப்பினை 22-05-2022 முதல் காலி செய்து அதன் சாவியினை ஒப்படைத்துவிட்டதாக வருவாய் ஆய்வாளரின் 20-06-2022ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட குடியிருப்பிற்கான கேட்பினை கணிணியில் இருந்து நீக்கம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குடியிருப்புக்கான வரிவிதிப்பு எண் 130/BP105/00035 க்கு மே 2022 க்கான கேட்பினை ரூ.4030/- என நிர்ணயம் செய்யவும் ஜூன் 2022 முதல் ஆணையாளர் குடியிருப்பிற்கான கேட்பினை கணிணியில் நீக்கம் செய்ய மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு- மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்3842/2022/அ2

**தீர்மானம் 109 – வரியில்லா இனங்களின்வரிவிதிப்பு எண் 130/ BP 105/00035ஐ கணிணியில் இருந்து நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 20

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2020-21 மற்றும் 2021-22 ஆகிய வருடங்களில் கீழ்வரும் அட்டவணையில் கண்டுள்ள வரிவிதிப்புதாரர்களுக்கு புதிய சொத்துவரி விதிப்பு செய்யபட்டு கேட்பு எழுப்பட்டுள்ளதால் ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரித்தொகைகள் நகராட்சி கணினி கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்யப்படாமல் உள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வரிவிதிப்புதாரரின் பெயர் மற்றும் முகவரி<br>திரு/திருமதி | வரிவிதிப்பு எண் | சொத்துவரி தொகை நீக்கம் செய்ய வேண்டிய வருடம் | நீக்கம் செய்ய வேண்டிய சொத்துவரித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கைகாட்டி மூப்பனார்<br>76/26 கூனங்குளம் நடுத்தெரு | 130/013/00386 | 2020-21 | 238 |
| | | 130/12339 | 2021-22 | 562 |
| 2 | த.லட்சுமணன்<br>11/6 கூனங்குளம் நடுத்தெரு | 130/013/00416<br>130/12378 | 2021-22 | 500 |
| 3 | ச.நந்தகுமார்‘<br>29/11 கூனங்குளம் நடுத்தெரு | 130/013/00183<br>130/12111 | 2021-22 | 444 |
| 4 | வீ.மங்கையர்கரசி<br>306/152 மதுரை ரோடு | 130/013/00134<br>130/12060 | 2021-22 | 402 |
| 5 | வீ.மங்கையர்கரசி<br>306/152ஏ மதுரை ரோடு | 130/013/00477<br>130/12451 | 2021-22 | 750 |
| 6 | திரு. எம்.ரத்தின சாமி<br>57/4ஏ4 ஆராய்ச்சிபட்டி தெரு | 130/008/00017<br>130/6918 | 2020-21<br>2021-22 | 10746<br>10756 |
| 7 | திரு. எம்.ரத்தின சாமி<br>59/4ஏ5–1 ஆராய்ச்சிபட்டி தெரு | 130/008/00018<br>130/6920 | 2020-21<br>2021-22 | 4342<br>4342 |
| 8 | திரு.வெ.பாலகணேஷ் 106 ஊரணிபட்டிதெரு | 130/0 22/00817<br>130/30897 | 2017-2018<br>2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 270<br>1362<br>1362<br>1362<br>1362 |
| 9 | திருமதி.கா.லட்சுமி 266/டி.எஸ். நம்பர் 864 பி ஊரணிப்பட்டி தெரு | 130/022/00380<br>130/20242 | 2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 630<br>630<br>630<br>630 |
| 10 | திருமதி.கா.லட்சுமி 267/டி.எஸ். நம்பர் 864 பி ஊரணிப்பட்டி தெரு | 130/022/00381<br>130/20243 | 2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 656<br>656<br>656<br>656 |
| 11 | திருமதி.கா.லட்சுமி 267/டி.எஸ். நம்பர் 864 பி ஊரணிப்பட்டி தெரு | 130/022/00382<br>130/20244 | 2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 656<br>656<br>656<br>656 |
| 12 | திருமதி.கா.லட்சுமி 267/டி.எஸ். நம்பர் 864 பி ஊரணிப்பட்டி தெரு | 130/022/00383<br>130/20245 | 2017-2018<br>2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 180<br>656<br>656<br>656<br>656 |
| 13 | திரு. சிவப்பிரகாசம் 266/163 கொளூர்பட்டி தெரு | 130/021/00362<br>130/19311 | 2017-2018<br>2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022 | 378<br>438<br>438<br>438<br>438 |

மேலே காணும் கலம் எண் 13ல் குறிப்பிட்டுள்ள சொத்துவரி கேட்பில் பதிவேட்டில் உள்ள வரிவிதிப்பு தொகை முழுவதையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண் 514 /2021/அ1

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 110 – வ.எண் 1 முதல் 13 வரையிலான சொத்துவரி விதிப்பு கேட்புகளை நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது. 2) மேலும் இதன் தொடர்ச்சியாக வரக்கூடிய 2022.23 முதல் மற்றும் இரண்டாம் வருடத்திற்குரிய கேட்பு தொகையினையும் நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 21

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட மூன்று ஆண்டு குத்தகை இனங்களை பெருமாள்பட்டி காமராஜர் நகர் தெருவிலுள்ள சமுதாய கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை இனத்திற்கு 10-06-2022 ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் அதிகபட்ச ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் அதிக பட்ச ஒப்பந்தபுள்ளித்தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ரவிக்குமார் | ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | ரூ25,000/- |
| 2 | திரு.மாணிக்கம் | | ரூ.20,000/- |

அலுவல குறிப்பு :- வரிசை எண் 1ல் கண்டுள்ள திரு.ரவிக்குமார் என்பவரின் அதிகபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ25,000/—ஐ ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண் 6651/2021/அ2

**தீர்மானம் 111 – அதிக பட்ச ஏலக் கேள்வி ஒப்புக்கொள்ளப்பட்டது**

பொருள் எண் :22

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஒன்பது ஆண்டுகளுக்கு உரிம ஆணை வழங்கிய கடைகளுக்கு ஒவ்வொரு மூன்றாண்டு உரிம காலம் முடிந்தவுடன் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை புதுபித்து வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன் படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அட்டவணையில் கண்டுள்ள கடை வாடகைதாரர் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து தருமாறு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளார். எனவே, அரசாணையின் படி கீழ்க்கண்டுள்ள கடை வாடகைதாரர்க்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து உரிமம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடை வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | கடை உரிமம் முடியும் காலம் | கடை உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| பெரியார் வணிக வளாக திறந்த வெளி கடைகள் | | | | | | |
| 1. | 130/289 | திரு.ஆனந்தராஜ் | 30.04.2022 | 01.05.2022 முதல் 30.04.2025 | ரூ.331/- | ரூ.390/- |
| 2. | 130/290 | திரு.ஆனந்தராஜ் | | | ரூ.516/ | ரூ.600/- |
| 3. | 130/291 | திரு.ஆத்தியப்பன் | | | ரூ.892/ | ரூ.1030/- |

அலுவலகக்குறிப்பு: - வரிசை 1 முதல் 3 முடிய கண்டுள்ள கடைகளின் வாடகையினை 15% உயர்வு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்:3707/2021/அ2

**தீர்மானம் 112 – வ.எண். 1 முதல்3 வரை உள்ள கடைகளின் மாத வாடகையினை 15 சதவீதம்உயர்வு செய்ய அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் :23</u>

நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வரி வசூல் தொடர்பான ஆய்வுக்கூட்டங்களில் சொத்துவரி மற்றும் காலிமனை வரியினங்களை நிலுவையின்றி 30-06-2022க்குள் வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிகுட்பட்ட பகுதியில் புதியதாக சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டு பழைய சொத்துவரி நீக்கம் செய்யப்படாமல் உள்ள கேட்புகள், சொத்துவரி பொது சீராய்வில் தவறுதலாக பயன்பாடு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரிக்கான கேட்பினை நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் குறிப்பு மற்றும் நேராய்வு செய்து அளித்ததின் பேரிலும் கீழ்கண்டுள்ள சொத்துவரிவிதிப்புகளின் கேட்பினை கணிணியில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதிக்காக.

| வ எ ண் | வார்டு எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | நீக்கம் செய்ய வேண்டிய காலம் | மொத்த கேட்பு தொகை | நீக்கம் செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 130/001/00 694 | ரா. காசிநாதன் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01198ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 2 | 1 | 130/001/01 093 | ஏமராஜன் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01217ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 3 | 1 | 130/001/00 393 | திருப்பதிராஜ் மாரீஸ்வரி | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01228ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 4 | 1 | 130/001/00 896 | ஆனந்தகுமார் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01095ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 5 | 1 | 130/001/01 156 | நாகராஜ் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01157ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 6 | 1 | 130/001/00 639 | பொன்னையா | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/00989ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 7 | 1 | 130/001/01 078 | திருப்பதி | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/001/01098ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 8 | 2 | 130/002/00 349 | அய்யனார் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/002/01114ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 9 | 2 | 130/002/00 355 | லட்சுமணன் | 2022-23 நிதியாண்டு முதல் | நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது | 130/002/01117ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 10 | 2 | 130/002/00 034 | ராமசாமி | 2022-23 நிதியாண்டு | நிலுவை தொகை | 130/002/00034ன் படி சொத்துவரி விதிப்பு |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td>முதல்</td><td>செலுத்தப் பட்டுவிட்டது</td><td>செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>11</td><td>26</td><td>130/026/00263</td><td>ராமசாமி</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/026/00590ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>12</td><td>2</td><td>130/1161</td><td>செல்லையா நாடார்</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/002/00675ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>13</td><td>11</td><td>130/10139</td><td>முத்துலட்சுமி, திவ்யா, கோபிகா</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/011/00916ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>14</td><td>29</td><td>130/25586</td><td>வேல்மயில் சவுந்தர பாண்டியன்</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/029/00249ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>15</td><td>30</td><td>130/26296</td><td>நாகபதி நாகராஜ்</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/030/00900ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>16</td><td>9</td><td>130/8422</td><td>மாரியப்பன்</td><td>2022-23 நிதியாண்டு முதல்</td><td>நிலுவை தொகை செலுத்தப் பட்டுவிட்டது</td><td>130/009/01633ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>17</td><td>2</td><td>130/002/00255</td><td>தங்கம்</td><td>2018-19 முதல் 2022-23</td><td>1392</td><td>130/002/00824ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>18</td><td>11</td><td>130/10294</td><td>தாயம்மாள்</td><td>2020-21 முதல் 2022-23</td><td>696</td><td>கட்டிடம் இடிந்த நிலையில் உள்ளது.</td></tr>
<tr><td>19</td><td>9</td><td>130/8575</td><td>முத்துப்பாண்டி</td><td>2017-18 முதல் 2022-23</td><td>1572</td><td>130/009/01949ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>20</td><td rowspan="2">32</td><td>130/27612</td><td>கலாவதி</td><td rowspan="2">2017-18 முதல் 2022-23</td><td>1680</td><td>130/40086ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>21</td><td>130/27580</td><td>நிர்வாகி, முடுக்குதெரு மல்லபுரம் சலவை தொழிலாளர் ஊர் பொது</td><td>1950</td><td>130/40066ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>22</td><td>1</td><td>130/50084</td><td>தீபக்வெங்கடேஷ்</td><td>2020-21 முதல் 2022-23</td><td>1707</td><td>130/001/01196ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>23</td><td>1</td><td>130/001/01153</td><td>வீரபாண்டியன்</td><td>2018-19 முதல் 2022-23</td><td>2824</td><td>130/001/01151ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>24</td><td>25</td><td>130/025/00844</td><td>ரவி</td><td rowspan="5">2017-18 முதல் 2022-23</td><td>30381</td><td>தவறுதலாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>25</td><td>2</td><td>130/30708</td><td>கோவிந்தன்</td><td>13630</td><td>130/002/01027ன் படி சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது.</td></tr>
<tr><td>26</td><td rowspan="3">32</td><td>130/27968</td><td>ராஜு</td><td>2740</td><td rowspan="3">ஆக்கிரமிப்பு காரணமாக 2017-18ல் இடிக்கப்பட்டுவிட்டது.</td></tr>
<tr><td>27</td><td>130/27969</td><td>தங்கராஜ்</td><td>3256</td></tr>
<tr><td>28</td><td>130/27940</td><td>ராதாகிருஷ்ணன்</td><td>2040</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29 | 32 | 130/27998 | காமராஜர் மாவட்ட முன்னாள் படைவீரர் சங்கம் | 2019-20 முதல் 2022-23 | 1236 | ஆக்கிரமிப்பு காரணமாக 2019-20ல் இடிக்கப்பட்டுவிட்டது |
| 30 | 25 | 130/025/00839 | பிச்சுமணி | 2017-18 முதல் 2022-23 | 25689 | தவறுதலாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு விட்டது. |
| 31 | | 130/025/00832 | | | 18384 | |

அலுவலகக்குறிப்பு- மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்3204/2022/அ2

**தீர்மானம் 113 – வ.எண் 1 முதல் 31 வரையிலான சொத்துவரி விதிப்பு கேட்புகளை நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது. 2) மேலும் இதன் தொடர்ச்சியாக வரக்கூடிய 2022.23 முதல் மற்றும் இரண்டாம் வருடத்திற்குரிய கேட்பு தொகையினையும் நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 24</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு ,வாகனம் எண்–TN67K9704- க்கு (டிராக்டர்) டீசல் பம்பு பழுது நீக்கம் ,ஆயில் பில்டர் புதியது மாற்றுவது மற்றும் டீசல் பில்டர் புதியது மாற்றுவது போன்ற பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக கனுமதி வழங்கப்பட்டுள்ளது மேற்படி பணிகளை மேற்கொள்ள 01/06/2022-ம் தேதி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முன் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விபரம் | SRIRAMMECHANIC LATH WORKS AND SUPPLIERS | TAJ PAUL AUTO MOBILES WORKS | MOORTHY WORKSHOP |
|---|---|---|---|---|
| 1 | 1) டீசல் பம்பு பழுது நீக்கம் செய்தல்<br>2) ஆயில் பில்டர் புதியது மாற்றுதல்<br>3) டீசல் பில்டர் புதியது மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவது தொடர்பாக | ரூ14,000/- | ரூ14,500/- | ரூ16,000/- |

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் ,குறைவான விலைப்புள்ளி ரூ14,000/-யை அளித்துள்ள SRI RAM MECHANIC LATH WORKS AND SUPPLIERS நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) நகரின் சுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1239/2022/எச்1

**தீர்மானம் 114 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 25</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு , வாகனம் எண்–(LVC) TN84H3908-க்கு இஞ்சின் ஆயில் ,கிவுன்ஆயில் ,கியர் ஆயில்,டிப்பர் ஆயில் மாற்றுவதற்கும் டயர் வீல்களுக்கு 4 ஸ்கிட்டக்கு கிரீஸ் மாட்டி ,இஞ்சின் ஆயில் பில்டர்கள் புதியது மாட்டி மற்றும் டிப்பர் வேலைகள் போன்ற பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள 01/06/2022–ம் தேதி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும முன் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விபரம் | SRI RAM MECHANIC LATH WORKS AND SUPPLIERS | TAJ PAUL AUTO MOBILES WORKS | MOORTHY WORKSHOP |
|---|---|---|---|---|
| 1 | 1) ஆயில் பில்டர் டீசல் பில்டர் புதியது.<br>2) 4வீல் கிரீஸ் பேக்கிங் செய்து கொடுப்பது .<br>3) ஆயில் மாற்றி தரக்கூலி<br>4) ஜாக்கி மோட்டார் வேலை செய்து கொடுக்க போன்ற பணிககளை மேற்கொள்வது– தொடர்பாக | ரூ9,950/- | ரூ10,250/- | ரூ10,800/- |

அலுவலக குறிப்பு :-

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் ,குறைவான விலைப்புள்ளி ரூ9,950/-யை அளித்துள்ள SRI RAM MECHANIC LATH WORKS AND SUPPLIERS நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) நகரின் சுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2980/2022/எச்1

**தீர்மானம் 115 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 26</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஒன்பது ஆண்டுகளுக்கு உரிம ஆணை வழங்கிய கடைகளுக்கு ஒவ்வொரு மூன்றாண்டு உரிம காலம் முடிந்தவுடன் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை புதுப்பித்து வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 03-07-2007ன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அட்டவணையில் கண்டுள்ள கடை வாடகைதாரர் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து தருமாறு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். எனவே அரசாணையின்படி கீழ்கண்டுள்ள கடை வாடகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து உரிமம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | கடை வரி விதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | கடை உரிமம் முடியும் காலம் | கடை உரிமம் புதுப்பிக்க வேண்டிய | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்டுள்ள வாடகை |
|---|---|---|---|---|---|---|
| பெரியார் வணிக வளாக கடைகள் | | | | | | |
| 1 | 130/262 | திரு.வெங்கடேஸ்குமார் | 31-03-22 | 01-04-2022 முதல் 31.03.2025 | ரூ.1172/- | ரூ1350/- |

அலுவலக குறிப்பு :- வரிசை எண் 1ல் கண்டுள்ள கடையின் வாடகையினை 15% உயர்வு செய்யலாம்

ந.க.எண் 3707/2021/அ2

**தீர்மானம் 116 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 27</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் காணொலி மூலம் ( Video Conference ) அனைத்து ஆய்வுக் கூட்டங்களும் மற்றும் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் அனைத்து பிரிவு ஆய்வுக் கூட்டங்களும் ஆணையாளர் அறையிலேயே நடந்து வருவதால், ஆணையாளருடைய அன்றாட பணிகள் மிகவும் பாதிப்படைகின்றன. எனவே ஆணையாளர் அறையின் அருகினில் உள்ள அறையினில் புதியதாக காணொலி கூட்டம் நடத்துவதற்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் வாங்கி பொருத்துவது அவசியமாகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | 22” Hp Monior | 1 No |
| 2 | Speaker | 2 Nos |
| 3 | Network and Internet Connection | |
| 4 | UPS Line Wih wiring Connection | |

மேற்கண்ட பொருட்கள் வாங்கி பொருத்துவதற்கும் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கும் ஆகும் செலவினத் தொகை ரூ.95,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :-

1) மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்றத்தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்

ந.க.எண்:- 3790/2022/E1

**தீர்மானம் 117 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 28</u>

இந்நகராட்சி நகராட்சி நகர்மன்ற தலைவர் அறைக்கு புதியதாக புதியதாக கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்காக கீழ்க்கண்ட பொருட்கள் மற்றும் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

| | |
|---|---|
| 1 | 30 Mtr HDMI Cable |
| 2 | HDMI Splitter |
| 3 | 5 Port D Link Switch |
| 4 | D Link Wi-fi Router |
| 5 | Cat 6 Cable 60 Mtr |
| 6 | Intercom 30 Mtr |
| 7 | Airtel Dish |
| 8 | Cable Connection |
| 9 | TTPI CCTV Installation |
| 10 | Dish CCTV Fibre Cable 70 Mtr |
| 11 | Airtel Connetion ( Broad Band ) |
| 12 | Municipal Comissioner Quarters A/C Maintanance work. |
| 13 | Municipal Comissioner Room A/C Maintanance work. |

மேற்கண்ட பொருட்கள் வாங்கி பொருத்துவதற்கும் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கும் ஆகும் செலவினத் தொகை ரூ.1,00,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :-

1) மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்றத்தலைவரிடம் முன் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்

**தீர்மானம் 118 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் :29

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு கீழ்வரும் அட்டவணையில் கண்டுள்ள வரிவிதிப்புதாரர்களுக்கு புதிய சொத்துவரி விதிப்பு செய்யபட்டு கேட்பு எழுப்பட்டுள்ளதால் ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரித்தொகைகள் நகராட்சி கணினி கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்யப்படாமல் உள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வரிவிதிப்புதாரரின் பெயர் மற்றும் முகவரி<br>திரு/திருமதி | வரிவிதிப்பு எண் | சொத்துவரி தொகை நீக்கம் செய்ய வேண்டிய வருடம் | நீக்கம் செய்ய வேண்டிய சொத்துவரித் தொகை<br>ரூ |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | தலைவர் கொளுர் பட்டி சாலியர் ஊர் பொது<br>231/145/1 கொளுர்பட்டி தெரு | 130/19273 | 2017-18<br>2018-19 | 310.00<br>370.00<br>680.00<br>--------- |
| 2 | எம்.சரவணன்<br>229பி/1/டி.எஸ் நம்பர்965பி<br>கொளுர்பட்டி தெரு | 130/021/00531<br>130/19501 | 2019-20<br>2020-21<br>2021-22 | 362.00<br>362.00<br>362.00<br>1086.00<br>--------- |
| 3 | மாரியம்மாள்<br>76/44ஏ கொளுர்பட்டி தெரு | 130/021/00187<br>130/19118 | 2018-19<br>2019-20<br>2020-21<br>2021-22 | 370.00<br>370.00<br>370.00<br>370.00<br>1480.00<br>-------- |
| 4 | பா.சோணைமுத்து<br>121/47 சிவஞானபுரம் தெரு | 130/021/00103<br>130/19021 | 2017-18<br>2018-19<br>2019-20<br>2020-21<br>2021-22 | 310.00<br>370.00<br>370.00<br>370.00<br>370.00<br>1790.00<br>--------- |
| 5 | சந்தனக்காளை<br>33ஏ பெருமாள்பட்டி முதல் தெரு | 130/004/00557<br>130/3392 | 2018-19<br>2019-20<br>2020-21<br>2021-22 | 348.00<br>348.00<br>348.00<br>348.00<br>1392.00<br>------- |
| 6 | முத்துமாடசாமி | 130/006/00594 | 2018-19 | 201.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 28டி பெருமாள்பட்டி 2வது தெரு | 130/5856 | 2019-20<br>2020-21<br>2021-22 | 402.00<br>402.00<br>402.00<br>1407.00 |

மேலே காணும் கலம் எண் 5ல் குறிப்பிட்டுள்ள சொத்துவரி கேட்பில் பதிவேட்டில் உள்ள வரிவிதிப்பு தொகை முழுவதையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3917/2022/அ1

**தீர்மானம் 119 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. மேலும் இதன் தொடர்ச்சியாக வரக்கூடிய 2022–23 முதல் மற்றும் இரண்டாம் வருடத்திற்குரிய கேட்பு தொகையினையும் நீக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 30</u>

இந்நகராட்சி ஆணையாளர், மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகிய இருவரும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கணிணியானது வாங்கப்பட்டு சுமார் 5 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இதன் காரணமாக அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டும், தொடர்ந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலையிலும் இருந்து வருகின்றது. தற்போதுள்ள நிலையில் தினந்தோறும் காணொலி மூலம் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருவதால் ( Video Conference ) அதில் கலந்து கொள்ளும் பொருட்டு புதியதாக அதி நவீன கணிணிகள் மற்றும் இதர பொருட்கள் கீழ்க்கண்ட விவரப்படி வாங்க வேண்டியது அவசியமாகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | Highest Confic Computer 27 “ Inch | 2 |
| 2 | Mic | 2 |
| 3 | Computer Speaker | 2 |
| 4 | Wep Camera | 2 |
| 5 | Computer Table | 2 |

மேற்கண்ட பொருட்களை வாங்குவதற்கும் அதற்காக ஆகும் செலவினத் தொகை ரூ.2,50,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- 1) மேற்கண்ட செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் 120 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 31</u>

இந்நகராட்சி நேதாஜி ரோடு ஜெயலட்சுமி சுவீட் ஸ்டால் முன்பு உள்ள பட்டுப் போன வேப்பமரத்தினை வெட்டி அப்புறப்படுத்தி எடுத்திக் கொள்வதற்கு 21.06.2022 அன்று பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | அதிக பட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு. கு. சூசைராஜ்,<br>17/7B, ரைட்டன் பட்டித் தெரு, | ரூ. 1050/- |
| 2 | திரு. என். காளிலிங்கம்,<br>360, ஊரணிப்பட்டித் தெரு, | ரூ. 1025/- |

மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்ட இரு நபர்களில் மேற்கண்ட மரத்தினை அதிகபட்ச ஏலக் கேள்வியாக ரூ.1050/- என ஏலம் கேட்கப்பட்டுள்ள திரு. கு. சூசைராஜ் என்பவரின் ஏலக் கேள்வியினை ஏற்றுக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:- 3293/2022/E1

**தீர்மானம் 121 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 32</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 32, பைபாஸ் ரோடு, கதவு எண் 1, ஸ்ரீ ஆண்டாள் திரையரங்கத்திற்கு தொழில்வரி 2017-18 முதல் 2022-23 வரை ரூ.8355/- நிலுவையாக உள்ளது. மேற்படி இடத்தில் திரையரங்கம் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக செயல்படாததால் மேற்படி தொழில்வரி, வதிப்பு எண் 130/32009 நீக்கம் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண் 3483/2022/பி2

**தீர்மானம் 122 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/ த.தங்கம் ரவிக்கண்ணன்**

நகர்மன்ற தலைவர்

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி